செ.வெ. 674 **பத்திரிகைச் செய்தி** நாள் 18-08-2008

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து அரசு அலுவலர்களுக்கான பயிற்சி முகாம்

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றுவது குறித்து மாவட்ட அலுவலர்களுக்கான 3 நாள் பயிற்சி முகாம் ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20–ம் தேதிகளில் சென்னையில் உள்ள ஆஷா நிவாஸ் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

'குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழகம்' என்ற இலக்கை அடைவதற்கு தமிழக அரசு மத்திய அரசு உதவியுடன் 17 மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புத் திட்டங்களான இன்டஸ் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டங்களை சிறப்பாக நடத்தி வருகின்றது. அனைத்து மாவட்டங்களிலும் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் உதவியுடன் "தொடர் கண்காணிப்பு முறையை" தீவிரப்படுத்தியுள்ளது. இதற்கான முதற்கட்ட பயிற்சி முகாம் மாநில அளவில் இரண்டு மண்டலங்களாக சென்னை மற்றும் மதுரையில் நடத்திட திட்டமிடப்பட்டது.

சென்னை மண்டலத்திற்கான பயிற்சி முகாம் ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆகிய 3 தினங்கள் சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள ஆஷா நிவாஸ் பயிற்சி மையத்தில் நடைபெற உள்ளது. இதற்கான துவக்கவிழா 18–ம் தேதி காலை 10.30 மணிக்கு சென்னையில் உள்ள ஆஷா நிவாஸ் பயிற்சி மையத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு ரமேஷ்குமார் கன்னா, இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றினார். மாநிலம் முழுவதும் நடைபெற உள்ள இப்பயிற்சி முகாமில் பயிற்சிகளுக்கான விளக்கக் கையேட்டினை வெளியிட்டு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் அவர்கள் விழா பேருரை நிகழ்த்தினார். தொழிலாளர் ஆணையர் திரு அ. சுகுமாரன், இ.ஆ.ப, கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு கே. செல்லமுத்து, இ.ஆ.ப., மற்றும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் திரு க. இளங்கோ, பி.ஈ., ஆகியோர் பங்கேற்றனர்.

குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்பு முறை குறித்த இப்பயிற்சியில் குழந்தைகளின் உரிமைகள், குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான வழிமுறையுடன், கிராம/வார்டு அளவில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான செயல்முறைகள், தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மக்கள் பங்கேற்புடன் குழந்தைத் தொழிலாளர் நிலையை அகற்றுவதற்கான வழிமுறைகள், ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவது குறித்த குறும்படங்கள் காண்பிக்கப்பட உள்ளன. பயிற்சியில் பங்கேற்போர் வேலூர் மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு களப்பணிகளை நேரில் சென்று பார்வையிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப்பயிற்சியில் *சென்னை, கடலூர், தர்மபுரி, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், வேலூர், விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை* ஆகிய 15 மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர் துறை ஆய்வாளர்கள், தொழிற்சாலை ஆய்வாளர்கள், ஊராட்சிகள் உதவி இயக்குநர்கள், அனைவருக்கும் கல்வித் திட்ட உதவி ஒருங்கிணைப்பாளர்கள், இன்டஸ்/ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர்கள், கள அலுவலர்கள், வளர்கல்வித் திட்ட மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், தொழிற்சாலை ஆய்வாளர்கள், பேரூராட்சிகள்

உதவி இயக்குநர்கள் ஆகிய சுமார் 100 அலுவலர்கள் பங்கேற்று உள்ளனர். மேற்கண்ட பயிற்சியில் தேசிய அளவிலான பயிற்சி ஆலோசகர்கள், ஐஎல்ஓ மற்றும் யுனிசெப் நிறுவன கருத்தாளர்கள் பங்கேற்று பயிற்சி வழங்குகின்றனர்.

இந்தப் பயிற்றுநருக்கான பயிற்சியைத் தொடர்ந்து மாநில அளவில் பயிற்சி பெற்றவர்கள் இந்தப் பயிற்சிகளை மாவட்ட அளவிலும் ஒன்றிய அளவிலும் ஊராட்சி மற்றும் வார்டு அளவிலும் பயிற்சியை நடத்த உள்ளனர்.

மதுரை மண்டல பயிற்சி முகாம் ஆகஸ்ட் 25, 26 மற்றும் 27 தேதிகளில் மதுரை தேனி சாலையில் உள்ள பில்லர் பயிற்சி மையத்தில் நடைபெற உள்ளது.

குழந்தைத் தொழிலாளர் கண்டறியப்பட்டால் உடனுக்குடன் மறுவாழ்வு அளித்து கல்வி வழங்கும் வகையில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதே இந்தப்பயிற்சியின் பிரதான நோக்கமாகும். அனைத்து பயிற்சிகளையும் மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு நிதியுதவியுடன் மேற்கொள்ளும்.

## CHILD LABOUR MONITORING SYSTEM
## TRAINERS OF TRAINING PROGRAMME FROM 18th to 20th AUGUST 2008
## PROGRAMME SCHEDULE – CHENNAI REGION

| Date | Time | Name of Resource Person | Topic |
|---|---|---|---|
| 18.8.2008 | 10.00 AM – 11.00 AM | Inaugural Session | |
| | 11.00 AM – 11.15 AM | Tea break | |
| | 11.15 AM – 12.15 PM | Thiru Vidhyasagar, Consultant, UNICEF, | Child Labour – Concepts, magnitude analysis |
| | 12.15 PM – 1.15 PM | Thiru A. Erskin, Project Director, SPEECH, Thiruchuli Post, Aruppukottai Taluk, Virudhunagar. | Child Rights |
| | 1.15 PM – 2.15 PM | Lunch break | |
| | 2.15 PM – 3.15 PM | Ms. G.Lally, ASC | Tamil Nadu Initiatives on Eradication of Child Labour |
| | 3.15 PM – 4.00 PM | Dr R.Akila | Child Labour Monitoring System – Techniques |
| | 4.00 PM – 4.15 PM | Tea Break | |
| | 4.15 PM – 5.00 PM | Group discussion & presentation | |
| 19.8.2008 | 8 AM | Start from Chennai to Vellore | |
| | 10.30 AM – 11.00 AM | Coffee break | |
| | 11.00 AM – 12.00 noon | District Collector, Vellore | Strategies in Elimination of Child Labour – Vellore experience |
| | 12 noon – 1.30 PM | PRA techniques by Vazhudhi Kattuveom trainers | |
| | 1.30 PM – 2.30 PM | Lunch Break | |
| | 3.00 PM – 6.00 PM | Field visit and PRA exercise in a village | |
| 20.8.2008 | 9.30 AM – 10.30 AM | Dr Palanidhurai, Professor, Gandhigram Rural University, Dindigul. | Role of Panchayats in Elimination of Child Labour |
| | 11 AM – 11.15 AM | Coffee Break | |
| | 11.15 AM – 12.15 PM | Thiru Kamaraj, Chairman, Keelapavoor Panchayat Union, Tirunelveli | Experience sharing – Efforts taken in declaring Child Labour Free Panchayat Union |
| | 12.15 PM – 1.15 PM | Dr Helan R Sekar, Professor, VVGNLI, NOIDA | National and International initiatives on Elimination of Child Labour |
| | 1.15 PM – 2 PM | Lunch Break | |
| | 2 PM – 3.45 PM | Group Discussion & PRA exercise in a village | |